**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் – திசம்பர் – 2018**

**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. யாப்பு என்றால் என்ன?
2. யாப்பருங்கலக் காரிகையின் ஆசிரியர் யார்?
3. காரிகை என்பதன் பொருள் யாது?
4. அசையின் இரு வகைகள் யாவை?
5. விகற்பம் என்பதன் பொருள் யாது?
6. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை எது?
7. தாழிசைக்குரிய அடிச்சிறுமை என்ன?
8. மூவகை இலக்கண நூல் ஒன்றினைக் குறிப்பிடுக.
9. நம்பியகப் பொருளின் ஆசிரியர் யார்?
10. குளகச் செய்யுள் வகைக்குச் சான்று தருக.
11. தன்மை நவிற்சி அணியின் வேறு பெயர் யாது?
12. வெண்பாவிற்குரிய தளைகள் எவை?
13. கலித்தாழிசை எத்தனை அடிகளைக் கொண்டது?
14. தமிழில் காப்பிய இலக்கணத்தை வரையறை செய்த முதல் இலக்கண நூல் எது?
15. புறப்பொருள் வெண்பா மாலையின் ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தொல்காப்பியம் குறிப்பிடும் யாப்பின் வேறு பெயர்கள் யாவை?
2. இயல்பான மாத்திரையில் ஒலிக்கும் எழுத்துகள் எவை?
3. நிரையசை என்பவை எவை?
4. எழுத்து நிலையில் தொடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. மருட்பா என்றால் என்ன?
7. காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
8. வஞ்சப் புகழ்ச்சியணி என்றால் என்ன? சான்று தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தளை குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தொடையின் வகைகளை விளக்கி வரைக.

2. (அ) ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) அணியிலக்கணமும் ஐந்திலக்கணமும் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) தமிழ் இலக்கண நூல் வகை குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

❋❋❋